மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

முன்னிலை: திரு.என்.ஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.

2022 ம் ஆண்டு ஜூன் மாதம் 14 ம் நாள், செவ்வாய்க்கிழமை.

அசல் வழக்கு எண்.59/2020

திருமதி.சங்கிலியம்மாள் .. வாதி

/எதிர்/

1.திரு.மகாலிங்கம்,
2.திரு.முத்துக்குமாரசாமி,
3.வட்டாட்சியர், பழனி.
4.கிராம நிர்வாக அலுவலர், பாலசமுத்திரம்.
5.மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல். .. பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்தும், என் முன்பாக வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் மா.பார்த்திபன் மற்றும் பா.ஆனந்தன் ஆகியோர் முன்னிலையாகியும், 1 ம் பிரதிவாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், 2 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் வி.மணிகண்டன் மற்றும் எஸ்.மணிகண்டன் ஆகியோர் முன்னிலையாகியும், 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இவ்வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு, இன்று விசாரணைக்கு வந்தபோது, வாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும், வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

வாதி பெயருக்கு பழனி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட மரப்பட்டா எண்.4881/2009 ன்படி பாத்தியப்பட்டு ஆண்டனுபவித்து வரும்

சொத்துக்களில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்கள் உள்ளிட்டோர்களோ எவ்விதத்திலும், எக்காலத்திலும் உள்நுழையவோ, ஆக்கிரமிப்பு செய்யவோ கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படி கோரியும், தாவா செலவுத்தொகையை வாதிக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு, இன்று விசாரணைக்கு வந்தபோது, வாதி அழைக்கப்பட்டு ஆஜராகவில்லை. வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. எனவே, இவ்வழக்கானது வாதியின் தவறுகைக்காக பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 14.06.2022ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N GNANASAMBANDAM Digitally signed by N GNANASAMBANDAM Date: 2022.06.14 17:50:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.